# படைப்பு

சமூகத்தின் இணைப்பு

## மின் இதழ்

பதிப்பு – 2

**01-07-2016**



சிலுவைகளை
சுமக்கிறோம்..
தெரிந்தே..
இன்னும் சிலுவைகள்
வேண்டுமென கேட்கிறோம்..
பிடிவாதமாய் பெறுகிறோம்..
சுமைதாங்கி நான் ..
என சொல்லிக் கொள்கிறோம்..
ஒவ்வொரு சிலுவையும்
வெவ்வேறு உயரங்களில்
செய்யப் பட்டிருந்தாலும்
ஆசை மரத்தால் ஆனவை
என்பதால் ..
அதிக விலை கொடுத்து
வாங்கிக் கொள்கிறோம்!
சந்தோஷமாய் இருப்பதாய்
காட்டிக் கொள்கிறோம் ..
சிலுவைகளை சுமந்தபடி !
-கருணா (கருணாநிதி சண்முகம்)

சற்று முன்புதான்
---------------
அவமானப்பட்டுவிட்டதாய்
அழுதுகொண்டு
என்னை துரோகியென்று எண்ணி
துன்பம் வளர்க்காதே...
கோபம் உன்னை
இன்று
இன்னொருவரின் மனைவியாக
மாற்றியிருக்கலாம்...
அந்த மை இரவில்
நண்பர்களுக்கும் தெரியாமல்
வேரிடம் நகர்ந்து
திருமணம் செய்ய திட்டமிட்டிருந்தோம்...
கூடிப் புறப்படும் இடத்தில்
கூறிச்சென்ற நேரத்தில்..
நெடு நேரம் நீ நின்றிருந்திருப்பாய்...
நான் வரவில்லை...
அவமானம்... அச்சம்.. அழுகை...
இயலாமையின் உச்சம்
உன்னை என் காதலின் மீது
காறி உமிழச்செய்திருக்கும்...
அவர்கள் உன்னை
உன் வீட்டிற்கு
அழைத்துச் சென்றிருப்பார்கள்...
உனக்குத்தெரியாது...
நான்
உனக்குமுன்னமே
அங்குதான் காத்திருந்தேன்...
நீ வரும் நேரத்திற்கு
சற்று முன்புதான்
அவர்கள் அங்கு
நான் நின்றிருந்த இடத்தின்
தடம் அழித்திருந்தார்கள் ..
ஆனால்.
அதற்குமுன்பே அவர்கள்
என்
தலை அறுத்துவிட்டார்கள்...
-சந்துரு

பேச ஆரம்பித்து
இடையிலே நிறுத்திக்
கொண்ட மழையின்
உரையாடலில்
மௌனமாகக்
கரைந்து
கொண்டிருந்தது
சாலையோர
ஓவியனின்
பாதி முடிக்கப்பட்ட
ஓவியம் ஒன்று.
பாய்ந்தோடும்
வெள்ளத்தில்
கலைந்து
சென்றுகொண்டிருந்த
ஓவியத்தின்
வர்ணங்களோடு
தொலைந்து
கொண்டிருந்தன
அவன் கனவுகளும்
கற்பனைகளும்..
நனைவதற்கஞ்சி
நிழல் தேடிய
மனிதர்களின்
மீள் வருகையை
எதிர் பார்க்காது
மழை நீரால்
மட்டும்
நிரம்பியிருக்கும்
சில்லறைத்
தட்டைச் சரித்து
கொட்டி விட்டு
மறுபடியும்
வரையத்தொடங்கும்
மாற்றுத் திறனாளி
ஓவியனின்
விரல்கள் இல்லாத
வெறும்
கைகளில்
இன்னும் வாழ்ந்து
கொண்டிருக்கிறது
நம்பிக்கை
எனும் ஆயுதம்.
-மீயாழ் செழியன்

மழையின் அறிவிப்பு
-------------------
நனைவதிலிருந்து தவிர்க்க
விரித்த
குடையின் மீது கொட்டிய மழை நீருக்குள்
தொலைந்த நான்...
நிலையற்ற உறவு சங்கிலி
தொடற்பின்றி
ஒற்றை கொக்குவென
விடப்பட்ட தலைவிதியை
எழுதிக்கொண்டிருக்கிறேன்
காற்றுடன் குளிரை நிரப்பி
சில்லென
தொட்டுப்போகும் மழைச்சாரலில் உணர்ந்தேன்
எனக்கான வாழ்க்கை
உச்சத்தை
- கா.இலட்சுமணன்

இரத்த வெள்ளத்தில்
குளிக்க
கழுத்தை அறுக்கும்
யுக்தி அறிந்து கொள்ள
முதுகுப்புறத்தில்
குத்திக் கிழிக்க
வேகவைக்காமல்
இறைச்சியை உண்ண
தீயில் தள்ளி விட
பாலில் விஷம் கலக்க
சோற்றில் நஞ்சு வைக்க
எதுவும் தேவையில்லை
நண்பா !
என் வாழ்வை அழிக்க
நீ கெஞ்சிக் கேட்கிற
ஒரு மதிப்பெண் விடையில்
கேள்விக் குறியாகிவிடுகிறது
எதிர்காலம் !
-திரு

நான் புத்தன்தான்
சாட்சிக்கு போதிமரங்கேட்டார்கள்
வெட்டக்கூடாதென்பதால்
விட்டுவிட்டேன்.
-வினோத் குமார்

ஒருசொல்லின்பரிணாமம்
---------------------
ஏதோ ஒரு
அரவமற்ற நதியில்
இரவு நேரத்து நிலவொன்று
ஒளிபாய்ச்சக்கூடும்
கவனிப்பின்றி.
புல்லின் தலையணையில்
சாய்ந்திருக்கும்
பனித்துளி ஒன்று
ஊதற்காற்றில்
துமியாய்ச் சிறுத்து
சிதறக் காத்திருக்கக் கூடும்
அனிச்சையாய்.
சடசத்துச் செல்லும்
சிறு மழையில்
பறவையொன்று
கழுத்தைத் திருப்பி
அலகு தீட்டக்கூடும்
தன் சிறகில்
இருள் தட்டிய
ஒரு கனவான இரவின்
கதகதப்பில்
ஒரு நெடிய கவிதைக்கான
ஒற்றைச்சொல்
உருவாகக் கூடும்
எனக்கும்.
-சுதந்திரன்

அடையாளமற்றுப் போ...

---------------------

ஒரு இனத்தில்
ஒரு சாதியில்
ஒரு மொழியில்
ஒரு நிலப்பரப்பில்
வெகு எளிதாக
அடையாளப் படுத்திவிடுங்கள்
சக மனிதன் ஒருவனை.
அவன் தன் வாழ்வை
எதிர்கொள்ளும் நாட்களில்
குளிர்சாதன அறையில்
இலவம் பஞ்சு மெத்தையில்
ஆடையும் கிழிந்த நிலையில்
ஒரு வெட்டவெளியில் என
எதுவொன்றிலும் அனுமதியுங்கள் அவனை.
இறந்தபின் அவனை
சதுக்கத்திலோ
கல்லரைத் தோட்டத்திலோ
கபர்ஸ்தானிலோ
சுடுகாட்டிலோ சேர்த்திடுங்கள்.
அதன்பின் அவனை
அடையாளத்திற்குள் வைத்து
அவமானப்படுத்த முடியாமல் போனதற்கு
வெட்கத்தில்,
வேதனையில்,
பெரும் துக்கத்தில்
நீங்களாகவே இறந்துவிடுங்கள்
உங்கள் பாவமும்
அடையாளமற்றுப் போகக்கூடும்.

-ஆண்டன் பெனி

அன்பின் சுழற்சி

--------------

சற்றே மகிழ்ச்சியாகி
குளிர்ச்சியாகிறது
அவற்றின் சந்திப்பு
விழும் துளிகளும்
தாங்கிய இலைகளும்
தெரிந்தோ தெரியாமலோ
பழகி விட அமைந்தது கார்காலம்
இசையெனக் கேட்கிறது
ஒன்றொடொன்றான
மென்னதிர் முத்தப் பேச்சு
காற்றழைத்து நழுவும் துளிகளை
விடாத இலைகளும்
பிரியா தடத்தோடே விடுகின்றன
விழும் துளியின் இறுதி நழுவலில்
இலையினது ஏதோ ஒட்டியிருக்க
அன்பளவு ஆழம் பேசிச் செல்கிறது
நிலம் நனைகிறது
ஒரு துளி அன்பினில்...
இலை துளிர்க்க
கொடுக்கிறது தன்னை...
துளி பார்க்க
துளிர் பார்க்கிறது விண்ணை...

- முருகன்.சுந்தரபாண்டியன்

காலத்தை கடந்த நிலை
--------------------
ஞாபகங்கள்
ரீங்காரம் விடுகிறது
இளம் தென்றலின்
இடைவேளைக்குப் பிறகு....
அழியாத காவியமொன்று
கதையாகி
மீண்டும் உயிர்ப்பிக்கிறது....
காத்திருத்தல்
மனக்கிடங்கின் சந்நிதியாகவே
உணரப்படுகிறது....
தோல்வி கண்டு
துவண்டுக் கிடப்பதாக
நம்பப்படுகிறது
தூரத்து வெற்றிகள்....
மௌனிக்கச் செய்தே
இம்சைக்குள் தள்ளவே
செய்கிறார்கள்.
சிந்தைக்குள் கலந்து போன
சில நபர்கள்....
அத்தனை சுலபமாய்
புதுஜென்மம்
எடுத்துவிடுவதில்லை.
வெட்டி வீழ்த்திய
காதலின் மனங்கள்....
எது எப்படியாகினும்,
சில இப்படிகள்
எப்படியாகவோ முடிந்து
போகிறது...
-ஆனந்தி

தொடரா நட்பின் சிதறல்
---------------------
நிராயுதபாணியாய்..
சொற்களைக் கூட ஆயுதங்களாய்
வெறுத்தொதுக்கிய
ஒரு வெற்றுப் பொழுதில் ..
உடலின் ஒவ்வொரு பாகங்களையும்
ஆயுதமாக்கி
என்னை வதைக்கிறாய்..
கண்களால் சிதைக்கிறாய்
விரல்களால் வாட்டுகிறாய்
வார்த்தைகளால் வறுத்து..
இதயத்தைக் கிழித்தெடுக்கிறாய்..
நட்பெனும் கவசம் தவிர
வேறெதுவும்
இல்லை என்னிடம்..
வந்த பாதைகளின் சில சுவடுகள்
இன்னும்
நன்றி பகர்கின்றன....
முதுகில் குத்தாமல்
முகத்தில் அறையும் உன்னைப்
பெருமைபடுத்த மட்டுமே தோன்றுகிறது
இப்போதும்...
அதுசரி..
இன்று போய் நாளை வா என கூற
நீ என்ன இராமனா...
-முனியாண்டிராஜ்

குரல்
-----
பத்து வயது சிறுவனை
ஒரு புத்தகப் பையோடு
வரைகிறீர்கள்
அல்லது கையில் ஒரு
பந்து வைத்திருப்பதாக
வரைகிறீர்கள்
பட்டம் விடுவது போலும்
நீங்கள் வரைந்திருக்கலாம்
அவன் ஏழையாய் இருப்பின்
சட்டையை கிழித்து விடுவீர்கள்
அல்லது தீப்பெட்டி செய்வதாக
காட்டுவீர்கள்
அனாதையாய் இருப்பின்
முழங்கால் மீது
தலை கவிழ்த்து விடுவீர்கள்
ஆப்பிரிக்க குழந்தையை
ஒரு தட்டு ஏந்த செய்வீர்கள்
வெள்ளையர் குழந்தை எனில்
கோட் அணிய வைப்பீர்கள்
கிருஸ்துவை இஸ்லாமை
இந்துவை சீக்கிய சிறுவர்களை
அவரவர் அடையாளம் கொண்டும்
தெரியப் படுத்துவீர்கள்
நீங்கள் இப்போது ஒரு சிறுவனை
வரைய வேண்டும்
அவன் முதல் படத்தில்
அப்பாவியாக உதடுகளை சுழித்துக்கொண்டு
தெரிந்த முகங்கள் தென்படுகிறதா
எனப் பார்க்க வேண்டும்
அடுத்த படத்தில் ...
உங்களுக்கு கைகள் நடுங்கும்
தூரிகையை இறுகப் பற்றி
நீங்கள் வரைந்து முடிக்கும்போது
ஒரு குரல் உங்களை கேள்வி கேட்கும்
அது உங்கள் மூளையை மோதி சிதறடிக்கும்.!
நீங்கள் பதில் சொல்வீர்களா.?
சரி விடுங்கள்
எதிரிகளுக்குத் தெரியும்
நீங்கள் ஒரு இந்திய இறையாண்மையர்
என்றும்
நான் ஒரு இரங்கற்பா எழுதுபவனென்றும்.
-ராம் வசந்த்

கிணற்றினை
மூடும் தீராத் தபனம்..
வறள் நாவினில்
புருவையா யோடும்
துளி எச்சப் புளிப்பு..
காகம் போல்
கற்கள் நிரப்பி
அருந்துவதன் கடினம்
ஊணுணரும்.. நீந்தான்
நான் மிதக்கக் குதித்து
ஊதிய வயிறும்,
பிதுங்கிய கண்களுமாய்..
கசடுண்ணும் மீன்
நிரம்பிய தொட்டியினை
கிணறென நினைத்து
வயிறு நுழையக்
குதித்தபின் யாவுமே
உடைந்து மாளுமோர்
அச்சக் கனாதான்..
-றாம் சங்கரி.

வேண்டுதல்

----------

எனக்கான சிறு வேண்டுதலுடன்
கண்கள் மூடி கைகள் கூப்பி
உதடு முணுமுணுத்த நொடியில்
கண்களுக்குள்ளே பேரிருட்டில்...
முகம் சிதைந்த ஒரு பெண்
குப்பைத்தொட்டி பிஞ்சுக் குழந்தை
கண்கள் கருக்கப்பட்டு கையேந்தும் சிறுமி
கண்ணில் மிரட்சியுடன் இளம் பெண்
போதையில் சுருண்ட ஆசாமி
கடல்தாண்டி சிறைபட்ட மீனவர்
சாதிக்குப் பலியான மாணவன்
ஏக்கத்துடன் ஒரு முதியவர்
பனியில் நடுங்கிடும் இராணுவவீரர் என
முகவரி தெரியா முகங்கள் நிழலாடின..
இவர்களுக்காக வேண்டிக்கொண்டு
கண்ணைத் திறந்த பொழுது
எனக்கான சிறு வேண்டுதலே
வேண்டாம் என்றானது மனது..!!!

-தப்தி செல்வராஜ், சாத்தூர்

ரகசிய அறையொன்று
திறக்கப்பட்டும் அதில்
எவ்வித நிறைவுமில்லை
என்பதால்
நிர்வாணம்
தொலைத்த ஆடையின்
முழுமையடைதல்
இல்லாத கதவுகள்
மெல்லவே அடைக்கப்படுகின்றன
ஒன்றுமில்லாத ஒன்றில்
கொண்டிருக்கும்
பக்தியை நான்
ஆலாபனை செய்கிறேன்
தவமொன்றினால்
கிடைக்கும்
பாவ விமோசனம் போல
அது கிளர்ச்சியூட்டுகிறது
ஆகவேதான்
சாவி இல்லாத
சூனிய அறையினை
இனி யாசிக்கப்
போகிறேன்

-நசீஹா மொஹைதீன்

தூரிகை
-------
ஓவியக் குமிழ்கள் ஒளிவிடுவதற்கான
சிந்தனை மின்சாரத்தைக்
வண்ணங்களாய்க் கடத்தும் கம்பிகள்
கோடைக்காலத்தில் மழையையும்
மழைக்காலத்தில் கோடையையும்
வீட்டுக்குள் கொண்டுவந்துவிடுகின்றன
தீந்தை குளத்தில் நீராடி
காகிதங்களில் தலைதுவட்டிவிட்டு
சோறுபோடுகின்றன தூரிகைகள்
ஓவியனின் வயிற்றுப்பசிக்கு.
தூரிகைகள் வண்ணம் குளிக்கா காலங்களில்
வானவில் தற்கொலை செய்துகொள்கிறது
ஓவியனின் வறிய வானத்தில்
ஓவியங்களை வாழவைத்துவிட்டு
வாழ்க்கையை கொன்றுவிடும்
சில தூரிகைகள் மீனுக்கு தலையையும்
பாம்புக்கு வாலையும் காட்டும்
விலாங்கு மீன்
ஓவியனின் தீராத பசியை
வரைந்துவிட்டு இளைப்பாறும்
தூரிகைகளில் எப்போதும்
வழிந்துகொண்டிருக்கும் இன்னும்
வரையப்படாத ஓவியத்தின் ஏக்கம்
சுவரில்லாமல் ,
வர்ணங்களில்லாமல் அழகியக் காதலை
கண்களால் வரைகின்றக்
காரிகையர் முன்னால் தங்களின்
கர்வத்தை தொலைத்துவிடுகின்றன
தூரிகைகள்.
புகழ்மிக்க ஓவியங்களில்
வாழுகின்ற ஓவியர்களுக்குப் பின்னால்
மரணித்திருக்கின்றன எல்லாத் தூரிகைகளும்
ஏற்றிவிட்டு ஏறமுடியாத
ஏணிகளும் ,ஆற்றைக்
கடக்கவைத்து கரைசேரா
தோணிகளும் மட்டுமல்ல தூரிகைகளும்தான்
கிடக்கின்றன கவனிப்பாரற்று .
இங்கே யார் வரையக்கூடும்
தூரிகையின் கண்ணீரை.?
- மெய்யன் நடராஜ்

அந்தப் பறவைக்கும்
எனக்குமான உரையாடலில்
யார் யாரோ வந்து போகிறார்கள்!
காலொடிந்து வீழ்ந்தக் கதையை
அழுகையோடு சொல்கிறது
அந்தப் பறவை !
நானும் என் துயரக் கதைகளை
அதனிடம் சொல்லி வைக்கிறேன் !
எங்களின் நட்பு
கால் குணமாகும் வரை நீடிக்கலாம் !
பறந்துச் சென்றபின் திரும்பி
வரலாம் ! வரமாலும் போகலாம் !
என் கதை அதனிடமும்
அதன் கதை என்னிடமும்
ஒரு மூலையில் உட்கார்ந்திருக்கும்
பாரங்களை
கழற்றி வைத்த நிம்மதியோடு !
-முகமதுபாட்சா

மெல்லிரவை மெதுவாய் விழுங்கி
தரைதொட விரைந்த கீற்றொளியினை
புல்லின் நுனியில் அடக்கி புணர்கிறது
இக்காலை...
தூங்கி வடிந்த சோகையின்மேல்
கன்னச் சூட்டின் கதகதப்பில்
தண்ணீர் தெளித்து எழுப்புகிறது
பனித்தீண்டல்...
உலகெனும் ஓவியத்திற்கு
வண்ணம் பூசி உறங்கப்
போகிறது இரவு...
மலர்களை உதிர்த்து மகரந்த
சேர்க்கையில் மயங்கியபடியே
இருந்தன நட்சத்திர செடிகள்...
சிவந்தபடியே இருந்தது வானம்...
எதனையும் இழந்தவனென
எதனையும் பறித்திருக்க
முயற்சித்திருக்கவில்லை இந்த
விடியல் என்னிடமிருந்து...
-வித்யா

என்னை புதைப்பதற்காய்
கோடாரியின் கூர் தீட்டி
உங்கள் கைகளை
காயப்படுத்திக் கொள்ளாதீர்கள்
போலியான அன்புடன்
சில  பூக்களை தூவுங்கள்
புதைந்து போவேன்
-சுயம்பு

மௌன முகமூடிகள்...
---------------------
மௌனமாய் ஒலியெழுப்பும்
முகமூடிகள் நிறைந்த
கடைத்தெருவினை
கடக்க விழைகிறேன்...
சிங்க முகமூடி
என்னைப்பார்த்து
கர்ஜித்தது...
குரங்கு முகமூடி
என்னைக்கண்டு
கைகொட்டிச் சிரித்தது...
பறவையின் முகமூடி
என்முகத்திரையினை
கிழிக்க யத்தனித்தது..
புத்தனின் முகமூடி
என்னுள் ஏதோ
உரைத்தது
ஒவ்வொரு முகமூடியும்
ஒவ்வொரு
முகம் காட்ட ...
அடிக்கடி மாறுகின்ற
மனித மனதினை
பிரதிபலிக்கும் முகமூடியை
எப்படித்தேர்ந்தெடுப்பேன்
சில நொடிக்குள்...!
-குமரேசன் கிருஷ்ணன்

வீட்டிக்கு பக்கத்திலேயே தான்
அப்பாவோட ஆபீஸ்..
தினமும் வீட்டுக்கு வருகையில்
கையில் தின்பண்ட பையோடுதான்
வருவார் அப்பா....
அப்பாவை முகத்தை பார்த்து
கதவை திறந்து விட்டதைவிட
கையை பார்த்து கதவை திறப்போம்
நானும் அண்ணாவும்...
கல்யாணத்திற்கு பின்பு அம்மா
வீட்டுக்கு போகும்போதெல்லாம்
சில ஆற்றாமைகளையும்
கோபங்களையும்
கையாலாகதனத்தையும்
அள்ளிக்கொண்டு போய் கொட்டி
வந்திருக்கிறேன்....
அப்பாவிற்கு உடல் நலமில்லாத
ஒருநாளில் பார்க்க சென்ற போதும்
கைவீசிப் போனாதாய் ஞாபகம்..
'என்னப்பா ஆச்சு' என்ற வினவலுக்கு
'ஒன்னுமில்லடா,நேத்துல இருந்து
வாயெல்லாம் கசக்குது...எழவே
முடியல..போகும்போது ஏதாவது
சாப்பிட வாங்கி தந்துட்டு போ...'
என்று நீட்டிய ரூபாய் நோட்டில்
எழுதப்பட்டிருந்தது என்
குற்றத்திற்கான தண்டனை...
- உமா

பழகிக்கொள்கிறாள்
------------------
முதலில் ரணம் காட்டி
பிறகு ஆறவைத்து
மரத்துப் போன வடுக்களாக
நினைவுகளை மாற்ற
நாள், கிழமை, தேதி என்று
எதுவும் பார்ப்பதில்லை அவள்.
மனதைப் பக்குவமாக்க
தேவையானபோது பழகிக்கொள்வாள்.
பிறகு தினசரி இடைவிடாமல்
நினைத்து நினைத்து
வழக்கம்போல இன்றும்
அவ்வாறே பழகிக்கொள்ளலாம் என
மனதைத் தேற்றுவாள்.
மன ஓய்ச்சலுடன்
நிதானத்தைக் குலைத்து...
இப்படியாக, மாதம் முழுவதும்
தவணை வாரியாக
தவிக்க விட்டுச் சென்ற
நினைவுகளைத் தொலைத்து,
எதிர்பாராத சாதுர்யத்துடன்
அந்த நாளை
எல்லையில்லாத தூரத்திற்கு அனுப்பிவிட்டு
'கீர... கீர...' என்று கூவி
அன்றைய வியாபாரத்தை ஆரம்பிப்பாள்
எங்கள் தெரு கீரைக்காரி.
-மனோ ரெட்

மாயா ஏஞ்சலோவிற்கு
தெரிந்ததெல்லாம்
கூண்டுப் பறவைகள்
பற்றி மட்டும் தான்...
நகைகள் அணியாத
ஆடம்பரம் விரும்பாத
அதிகம் சிரிக்காத
சிறகுகள் இழந்து
எனது அருகில் அமர்ந்து
வானத்தையே காண விரும்பாமல்
ஒடிந்த சிறகுகளுக்கு
களிம்பிட்டுக் கொண்டிருக்கும்
வானம்பாடிக்கும் தெரியும்
கல்யாணக் கூட்டிலிருந்து
பிரிந்து வாழும்
பறவைகளும் ஏன்
பாடல்கள் பாடுவதில்லை என...
- மகி பா

யாரிடமும் சொல்லாதே
என்று சின்னமா சொல்லிச் சென்ற
ரகசியத்தை
பெரியம்மா வந்து
உனக்கு மட்டும் தெரிந்தால் போதுமென்று
காது கடித்தாள்...
அப்பாவும், சித்தப்பாவும் பெரியப்பாவும்
தனித்தனியாய் கிசு கிசுத்துப் போனதைதான்
அம்மா கொல்லை புறம்
தனியே அழைத்து
தம்பி இது உனக்கு தெரியுமா? என்று
கேட்டாள்
இப்படியாய் நாள் முழுதும்
எல்லோரும் சொல்லிச் சென்ற
ரகசியத்தை...
பின்னிரவில் தெருவில் நின்று
உரக்கச் சொன்ன மாமனை...
குடித்து விட்டு உளறுகிறான் லூசு
என்று வீடே சொன்னதுதான்...
எனக்கு ஆச்சர்யமாய் இருந்தது...!
- தேவா சுப்பையா.

நெற்றி நிறைய
சுற்றத்தார் ஆசீர்வாதங்களோடு
விமானம் ஏறிப்
புறப்பட ஆயத்தமானவன்...
கைக்குழந்தையோடு இருக்கும்
மனைவியிடம்
சொல்லிப் போகிறான்....
"குலசாமி தொணைக்கி நிக்கும்""...
அழுதுகொண்டே சிரித்தபடி
சிணுங்கும் குழந்தையைத்
தட்டியவாறே அவளும்
வழியனுப்புகிறாள்....
" குலசாமி கூட வரும்".....
எந்தப்பக்கம் செல்வதெனத்
தெரியாமல் குழம்பி
வீரமுகம் காட்டிக்கொண்டிருந்தது
வாளேந்திய குலசாமி....!!
-கட்டாரி தமிழ்

அப்பாவின் கோபம்

-----------------

தனது
சட்டைப்பையில்
இருந்த
நூறு ரூபாயைக்
காணவில்லையென்று
கத்திக் கொண்டிருந்தார்
அப்பா !
மடித்து வைக்கப்பட்டிருந்த
துணிகளெல்லாம்
மூலைக்கு மூலை
பறந்தன !
அப்பாவின்
மறதியைக்
குத்திக் காட்டிய
அம்மாவுக்கு
அடி விழுந்திருக்க
வேண்டியது !
விளையாடிவிட்டு
ஓடிவந்த தங்கை
பக்கத்து வீட்டில்
தஞ்சம் புகுந்தாள் !
எனக்கும்
தடிமாடு என்கிற
திட்டு !
உங்க
சங்காத்தமே வேண்டாம்
இனி வீட்டுக்கே
வரமாட்டேன்
என்று
சட்டையைப் போட்டுக்கொண்டு
கிளம்பிய அப்பா
இரண்டு மணிநேரம்
கழித்துத்
திரும்பி வந்தபோது
அவர்
கையிலிருந்தது
எங்கள் மூவருக்குமான
பரோட்டா பார்சல் !

-கிருஷ் குருச்சந்திரன்

மீண்டும் ஒரு அப்பா கவிதை
------------------------

அப்பா!
மரபணுவில்
நீ விட்டுச்சென்ற
அடையாளங்கள்தாம்
என் எழுத்துக்களாக
இன்றும் பரிணமிக்கின்றன !
என் முன்னே
நீ வேய்ந்திருக்கும்
நினைவு விதானத்தில்
கொட்டிக் கிடக்கின்ற
அனுபவத் துணுக்குகளை
ஒவ்வொன்றாய் எடுத்து
அவற்றில் படிந்திருக்கும்
காலத்தின் தூசு உதிர்ந்துவிடாமல்
பொன்வண்டை உள்ளங்கையில்
ஏந்திய சிறுவனைப் போல
என்னைச் சூழ்ந்திருக்கும்
மனிதருக்கு காண்பிக்கையில்
கவிதைகள் என அவைகளை
பெயரிட்டு அழைக்கிறார்கள் !
பேற்றின் வலியடங்கி
அரை மயக்கத்தில் கிடந்த
அம்மாவிடமிருந்து என்னை நீ
வாரி எடுத்த கணத்திலிருந்தே
உன் வியர்வை வாசத்தை
நேசிக்கத் துவங்கி விட்டேன் !
வாங்கி வந்த
இனிப்புக்களை
தூக்கத்தில் எழுப்பி
எனக்கு ஊட்டிவிட்ட நீ
வாழ்வின் கசப்புக்களோடும்
கைகுலுக்கக் கற்றுக் கொடுத்தாய் !
முட்களின் முத்தமேற்று
நைந்துப்போன உனது செருப்புக்கள்
செந்நிற வண்ணத்தை பூசிய
என் வழித்தடத்தை உருவாக்கின !
மானாவாரி நிலத்தின்
அடகுச் சீட்டுக்களால்
எனது எதிர்காலத்தை
பத்திரப்படுத்திய உனக்காக
என்றாவது எழுதும்
சில கவிதைகளைத்
தவிர்த்து வேறொன்றும்
செய்ய இயலாதாவனாய்
விழிகளில் திரளும்
கண்ணீர்த் துளிகளோடு
நானும் என் மக்களின்
எதிர்காலத்தை கனவுகளால்
நெய்து கொண்டிருக்கிறேன் !

-ஜி ராஜன்

உச்சிப்பூ....!
-----------

இன்றொளிர்ந்த நட்சத்திரங்கள்
அவளுக்கு சாதகமாக இல்லை
அவள் கண்ணெதிரே
எரிந்தெரிந்து விழுகின்றன
தனிமையின் தாளெடுத்து
நினைவுகளால் கிறுக்குகிறாள்
கடந்த காலத்தைப் போல
ஒரு கவிதை இல்லை
பட்டாம்பூச்சிக்கு
இணையாய் சிறகடித்த
காலம்
தாவணிக் கனவுகளை
மழை பின்னிய காலம்
மூச்சுக்காற்று கூட
குழலின் துளை சேர்ந்த காலம்
உச்சிப்பூ இளமை
உதிரும் முன் வாழ்ந்த
தடயங்கள் தான்
எத்தனை எத்தனை...
வெறுங் கிளையில்
கூடு திரும்பாமல் தவங்கிடக்கும்
ஒரு பறவையை இன்றவள்
வெறித்திருக்கிறாள்
இப்போதைக்கு...
அவளுக்கான ஒரு கூடு
எங்கேனும்
கதவுகள் திறந்து காத்திருக்கும்
என்று முடிகிறது இந்தக் கவிதை
-சுஜய் ரகு

சலனம்
------

தனக்குத் தானே
லயித்திருக்கும் ஏரி
ஏரியின் சலனம்
ஏரியினுடையதே
கால் சலங்கை கட்டிச்செல்லும்
காட்டு நதி
நதியின் சலனம்
நதியினுடையதே
காலையின் கூட்டிசையில்
கருங்குயில்
குயிலின் சலனம்
குயிலினுடையதே
துளிநீரில் சிறகடிக்கும்
சிட்டுக்குருவி
குருவியின் சலனமும்
குருவியினுடையதே
நான் மட்டுமேன்
சலனப்படுகிறேன்
என்னோடும் உன்னோடும்
அவனோடும் இவனோடும்....?
-கவித்தாசபாபதி

அப்புறம்..!
அப்புறம்..!
அப்புறமென நெருங்கியபடியே
நமது புறங்களை
மறந்திருந்தோம்...
காலை அசதிகளோடு
கிள்ளியபடி தூக்கமுடைப்பாய்..
இரவில் நாம் மிச்சம் வைத்த
கொஞ்சல்கள் நீடிக்கும் என்
கனவை கலைத்தபடியே..!!
தெரியாமல் என் கால்கள் இடற
நாற்காலியில் அமர்ந்தவாறே
நல்லா வேணும் என்கிறாய்..
தற்காலிக நொண்டியோடு மெதுவாக
துரத்துகையில் சீக்கிரம் அகப்படுகிறாய்..
காதலின் வேகம் புரிகிறதெனக்கு..
அழகாயிருக்கிறாயென
சொல்லும்பொழுதெல்லாம்
ஐஸ் வைக்காதே என்றவாறே
திரும்பிக்கொள்வாய்
முத்தப்பனிக்கட்டிகளை
வெட்கச்சூட்டில்
உருகவிட்டப்படியே....
நிலா பார்க்கலாமென
முற்றத்திலமர்ந்தோம்
கடைசியில் வெட்கம் தாழாமல்
நிலா தான் பார்த்துக்கொண்டிருந்தது
நம்மை..
ஒவ்வொரு திருமண நாளிலும்
காதல் மொழிகையில்
முதல் முறையை விட நீ
அதிகமாய் பூரித்துக்கொள்வது
நம் உயிரின் மடங்கு...
என் தலை கோதிக்கொண்டிருந்த
ஒரு நாளில் என் நரைத்த முடிகளை
அடையாளம் காட்டி புருவமுயர்த்தினாய்..
ஒன்றும் சொல்லாமல் இருவரும் சிரிக்க
நீ நெஞ்சில் சாய்ந்தது நம்
காதலின் கனம்..!!

-கனா காண்பவன்

ஆகினை தொட்டு
ஆறு நிலை தாண்டி
அமைதி அனுபவிக்க
ஆயிரம் எடுத்துச் சொல்லியும்
செவிமடுக்கவில்லை
பாதுகாப்பில்லை
எனப் பிறரைக்
குறை சொல்லிப்
பொருள்தேடித் தோற்பதே
வாடிக்கை
கையில் வெண்ணையைக்
கொண்டு நெய்க்கு அலைவதுதான்
தனித்திறமை எனக்
கவுரவிக்கப்பட
வள்ளுவ மாமுனியே
தெரிந்துகொள்ளுங்கள்
'அகர முதல எழுத்தெல்லாம்...'
மேடையேறி ஒப்பித்துப்
பாராட்டுப் பரிசு
பெறுதற்கு மட்டுமே

-மணிமீ

சிறகை பிரிந்த இறகின்
புவியீர்ப்பு விசையாய்
மெல்லிய இழையோடும்
தரையிறங்களில்
ஓர் ஊனம்
காற்றோடு உலாவித் திரிந்து
சஞ்சரிக்கின்றது
ஊசல் குண்டாய் தொடர்ந்து
அசைந்தது ஈர்ப்பின்
நன்நேரங்களுக்காகவே
என்பதை கடிகாரமும்
அறியாது போவது
விசித்திரமில்லை தான்
வர்ணங்கள் இறந்த ஓவியங்களாய்
பூக்கும் மலர்கள் சிரசில் அமர்வது
சாத்தியமில்லை
என்றாலும் வெண்மல்லிகை
உச்சி முகரவில்லையா
பளிங்கு நிற மேடுகளாய்
உள்ளங்கள் சமைந்தாலும்
மாணிக்கங்களை மண் தான்
விழுங்கியுள்ளது
நிழலை கூட இருட்டுகள் விழுங்கும்
சொந்தக் கால்கள் தான்
இடறி விழ வைக்கும்
நகங்கள் தான் தோலை கிழிக்கும்
தம்மைத் தாமே வீழ்த்தும் போது
தாமல்லாதோர் வாழ்த்து சாத்தியமில்லை
விம்பத்தை சிதைக்கவே
அழியும் கண்ணாடி இரசங்கள்
எப்போதோ நம்மை அழகு பார்க்க
வைத்தவைகள் தான்
புத்தியுள்ள நிலவு
ஒளி தந்தாலும் விரும்பியே
தனித்திருக்கிறது
தம்மை தாம் மட்டுமே அறிந்ததால்
எண்ணச் சுமைகள் வார்த்தைகளாகும்
வக்கிரம் நீக்கவே எழுத்துக்களாகின்றன
தாக்குவதை காட்டிலும்
தாங்குவது மேல் என
அதுவும் நிரூபிக்கப்படாத
குற்றமாகின்றன
-சஹீ.

கசாப்பு கடை ஆடுகளை
பற்றிய கவிதை தாங்கிய
தாளொன்றை உண்ணாது
கடந்தன குட்டிகள்...
அதே தாளை கிழித்து
வடை குடித்த எண்ணெய்யை
குடிக்க பணித்தான்
வெட்டும் இடைவெளியில்
கசாப்பு கடைக்காரன்...
எழுதியவன் நாவிற்கு
கொழுப்புக் கறி பிடிக்குமென்று
தேர்ந்தெடுத்து தட்டிட்டாள்
இல்லாள் இருமுறை...
கடைசி வரை
நமக்காக போலியாகக்கூட
இரக்கப் படுவார்கள் என
தெரியாமலேயே இறந்த
ஆட்டிற்கு என் இரங்கல்கள் !
-வினோதன்

காலச் சிதைவுகளில்
நாம் உலவும் வெளியிலிருந்து..
--------------------------
எங்கிருந்து தொடங்கினாலும்
ஓரிடத்தில் முட்டிக்கொண்டு வருகிறது
துடைத்தெறிய முடியாதபடி
கனத்த அழுகையொன்று

கேள்வி கணக்கற்ற
விதியான விபத்துபோல்
விசாரிக்கப் படுவதில்லை
காலச் சிதைவுகளில்
நாம் உலவும் வெளி

இரும்பாலாகி
இணைபடா சட்டங்கள் போல்
இழுபடுகிறது இருப்பு

அதி உச்ச பாகையின்
வெஞ்சூட்டில்
வெந்துறையும் உயிர் முடிச்சு
புழுங்கி வெந்த கணங்களை
பசியாற வேண்டிய பரிதாபமிகு
துர்ப்பாக்கியம்

ஊரின் நினைவுத் துகள்கள்
படிந்து விடும் மனது
ஓடிவர அலைவதில்லை
இயலாமையின் பெருமூச்சுகளில்
இடறி விழுவதால்

சக பயணியான
உனதன்பின் உன்னதங்களில்
அருகிருந்து லயிக்க
சமரசங்களால் சாமரம் வீசும்
உன் நிழலில் நிரந்தரமாய் வந்தமர
இன்னும் எத்தனை கோடைகளுக்கு
இரட்சிக்க வேண்டும் நான்?
-ரோஷான் ஏ.ஜிப்ரி.

அடையப்படாத விடுதலை
------------------------
எனக்காக
என் கடிகாரத்தை நிறுத்த முடியவில்லை.
நான்
சரியான நேரத்தில் விடுவிக்கப்படுவேன்
என்ற நம்பிக்கையில்
மணிக்கட்டையே பார்த்துக்கொண்டிருந்தேன்.
பரிசுத்தமான உணர்ச்சிமிக்க
மன்னிப்பை
என் கடைசி செயலாக ஆக்கிக்கொண்டேன்.
மீண்டும் ஒருமுறை
நான் சுவர் கடிகாரத்தில் மணி பார்த்தேன்.
சுவரின் வர்ணங்கள் நன்றாக உலர்ந்திருந்ததை
என்னால் இன்னும் பார்க்கமுடியவில்லை.
என் அறையின் காற்று என்னை இறக்கி
வெளிப்படையாக சுற்றி
எதிரியைப போல் பலமாய் வெளிவரும் நிலையில்
இளஞ்சூட்டை உணர்ந்தேன்.
ஒருபோதும் சளைத்திடாத கடிகார வேகம் குறைந்துள்ளது.
சூரியன்,
அடிவானத்தில் பின்னால் ஒளிந்து பச்சையாய் ஒளிர
எனது மார்பில் ஒளிர்ந்த என் தேசக் கொடியை
தன் படுக்கையை கிழிப்பது போல்
குத்திக்கிழிக்க நேரத்திற்கு அனுமதித்தேன்.
என் விடுதலை உண்மையானது.
அதன் காத்திருப்பை
ஆனந்தமாய் ஏற்றுக்கொள்கிறேன்.
ஆனால் அதற்கான நேரம் இறுதியாக வந்தபோது
எதுவும் மாறவில்லை - நான்
என் விடுதலைக்காய் உணர்ச்சியில்லாமல் உறங்கிக் கிடந்தேன்.
- நிஸ்பான் ஹம்ஜா

மரணத்தின் சோகமடர்ந்த காற்றின் கேவல்..!!
---------------------------------------

மரணத்தின் சோகக்காற்று இறுகிக்கிடந்த மையவாடியில்
மரணித்த தன் அப்பாவைக் குறித்து ஒருவர் பேசிக்கொண்டிருந்தார்
காற்று சற்றே நெகிழ்ந்தது
மரணித்த தன் சகோதரனைக் குறித்து
ஒருவர் பேசிக்கொண்டிருந்தார்
காற்று சற்றே தளர்ந்து இளகியது
மரணித்த தன் மனைவியைக் குறித்து
கையறுநிலை கசியக்கசிய
ஒருவர் பேசிக்கொண்டிருந்தார்
காற்று ஈரப்பதம் பூண்டு கனிந்தது
மரணித்த தன் தாயின் மண்ணறைக்கருகே ஒரு சிறுவன்
குலுங்கிக்குலுங்கி அழுதுகொண்டிருந்தான்
காற்று மேகக்கூட்டங்களைச் சுவீகரித்துக் கருமை பூண்டது
மரணித்த தன் மகளைக்குறித்து
கொதிநிலை தகிக்கத்தகிக்க ஒருவர் பேசிக்கொண்டிருந்தார்
காற்று ஆவேசம் கொண்டு சுழன்றடித்தது
மண்ணைவாரி சகலர் முகத்திலும் இறைத்தது
ஒரு சூறாவளியாக மாறி ஆடைகளைக் களைத்துப்போட்டது
சோவெனப் பெருமழையாய்ப் பொழிந்து கண்ணீர் உகுத்தது
தன் மகளுடன் தானும் செத்திருக்க வேண்டாமா என்றுபுலம்பியவர்
தலையில் மடார் மடாரென அடித்துக் கொண்டே அழுதுகொண்டிருந்தது
யார் காதுகளிலும் விழாமலே போனது.

–நிஷாமன்சூர்

*முட்டைக்கும் எனக்குமான உறவு*
*முடிந்தபாடில்லை இப்போதும்.*
*முட்டை எப்போதும் என் தேர்வுகளை*
*நினைவூட்டிவிடுகிறது மிக எளிதாக.*
*போன பிறவியில் முட்டை போடாத கோழியாகவே இறந்தவர்கள்தான்*
*இன்று சிவப்பு மையில்*
*முட்டை போடும் ஆசிரியர்கள்*
*என வெகுநாள்வரை நம்பியிருந்தேன்.*
*என்னோடு முட்டை வாங்கியவர்கள் எல்லாம் முதலாளி ஆகிவிட*
*நான் மட்டும் முட்டை வாங்குபவனாகவே*
*இருக்கிறேன் இப்போதும்.*
*என் மனைவிக்கு*
*தெரிந்திருக்க வாய்ப்பில்லை.*
*என் வீட்டில்தான் யாரோ சொல்லியிருக்கக்கூடும்*
*அடிக்கடி கேட்கிறாள் என்னை*
*முட்டை வேண்டுமா என்று.*
*எதை மறந்தாலும் மளிகைக்கடையில்*
*மறந்ததே இல்லை முட்டை வாங்குவதை மட்டும்.*
*ஒருநாள் முட்டை வாங்க கடையில் நின்ற என்னிடம் எதார்த்தமாய் என்ன வாங்குன*
*என கேட்கும் என் ஓய்வு பெற்ற ஆசிரியரிடம்*
*ஏனோ..சொல்வதறியாது நின்றிருந்தேன்.*
*வெள்ளைக்கரு சிதையாமல் ஓடு உரிக்கும்*
*லாவகத்தில் இரகசிய சுகம் காண்பேன்.*
*ஆம்ப்லெட்டில் பெப்பர் தூக்கலாக வேண்டும் என கொக்கரிப்பவர்கள்*
*என்போன்றவர்கள்தான் என்று*
*எனக்கு பின்நாளில்தான் தெரியவந்தது.*
*முட்டையில் வாழ்வின் அரிய*
*தத்துவங்கள் கருவுற்றிருக்கும் அது எப்படி*
*அறிவில்லாதமைக்கு அடையாளமானதெண்ணி*
*ஆச்சர்யப்பட்டிருக்கிறேன்*
*கோழிப்பண்ணையின் அருகில் உள்ள*
*ஒரு பெரிய பள்ளியில் படிக்கிறார்கள்*
*என் பிள்ளைகள் என்றாலும்*
*அவர்கள் வாங்குவதேயில்லை முட்டை.*

*– நிலாகண்ணன்*

கற்பனைக் கெட்டாக் கவிதைக் களஞ்சியமே
நற்கவி தந்திட்ட நாயகனே! - பெற்றோம்
பெரும்பேறு, நின்றன் பிரவாகப் பாக்கள்
திருவாய் வடித்திடும் தேன்.

முத்துக்கள் ஒவ்வொன்றும் முத்தையா நின்பாடல்
சொத்தாகும், வாசிப்போர் சோர்வகற்றும் - தித்திக்கும்
தேன்பாக்கள் உள்ளத்தைத் தென்றலாய்த் தாலாட்டும்
மேன்மையாய் ஓங்கும் மிளிர்ந்து.

இளமை ததும்ப இதமாய் வருடும்
வளமை வரிகளால் வாழும் - உளமும்
குளிரும் உவகையுங் கொள்ளும், எழுத்தில்
களிக்கும் இதயங் கனிந்து.

காலங் கடந்தாலும் காற்றில் கலந்தொலிக்கும்
ஞாலம் முழுதிலும் நாதமாய்! - கோலமாய்
நெஞ்சில் பதிந்திடும் நீங்கா நினைவுகளாய்
தஞ்ச மடையும் தகவு.
-சியாமளா ராஜசேகர்

இதோ பிறக்கப் போகிறதொரு பொழுது..
அதைச் சூல் கொண்டிருக்கும் இக்கனத்தின்
உப்பிய வயிறு ஆழ் மனதில்
பயஅரச மரமொன்றை அசைத்துக் கொண்டிருக்க..
அதனடியிலுருந்து ஒரு கூண்டுக் கிளி
வெளிவந்து சீட்டொன்று தேர்ந்தெடுத்து
பின் துப்பிய உமியின் கூர்முனை
நெருடத் தொடங்கியது..
வெளிவரப் போகும் பொழுதுக் குழவிக்கென
இப்போதில் தைத்துக் கொண்டிருக்கும்
சிற்றுடையின் மேல் ஓடும் ஊசி
தடுமாறி உடைந்து போகிறது..
அவ்வுடையின் வண்ணங்களூடே
உட்புகுந்த கருமையின் பதுங்களும் கூட
காரணமெனப் பின் நாளில் அறியப்படலாம்..
எனினும்
உடைந்த ஊசி முனைகளும்
உமிகளும் பல்கிப் பெருகி
உப்பிய வயிறுனுள் உட்புகாமல்
தடுப்பதற்கான முகாந்திரங்களில் மூழ்கியிருக்கையில்..
வண்ணப் பூச்செண்டென பிறக்கப் போகும்
பொழுதின் தலை வெளித் தெரிகிறது…
பிரமித்து இமைமூடிய அந்நொடி
போதுமானதாயிருக்க
வெள்ளைத் துண்டின் மேல்
குழந்தையின் அற்புத புன்னகை தேக்கி
செவிலித்தாய் எடுத்துவர..
பயங்கர எண்ணத் தேர்
அதன் கூடாரத்தினுள் ஓட்டங்களை விட்டு விட்டு
உட்சென்று உட்கார்ந்து கொள்கிறது..
இதோ இருகைகள் ஏந்தி
பொழுதைத் தூக்க முற்படுகையில் …
உடைந்த ஊசி முனைகளையும்
உமிகளையும் பதிந்துபோன தேர்த்தடங்களையும்
தூக்கிக் கொண்டு என் பின்னால் யாரும்
ஓடிவரவேண்டாமென விண்ணப்பிக்கிறேன்…
-ராகவபிரியன்